# BSNL ஊழியர்சங்கம்

## தமிழ்மாநிலம்

**சுற்றறிக்கை எண்:60** **தேதி:-10.04.2018**

**2018- ஏப்ரல் 3 முதல் 5-ஆம் தேதி வரை அகர்தலாவில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

### 1. துணை டவர் கம்பெனியை எதிர்த்து பிரச்சாரமும் போராட்டமும்

துணை டவர் கம்பெனி அமைக்கும் முடிவைக் கைவிடுமாறு கோரி, அனைத்து தொழிற்சங்கங்கள் நடத்தி வரும் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு மத்திய செயற்குழு கூட்டம் பாராட்டுக்களைத் தெரிவித்தது. எனினும், துணை டவர் நிறுவனத்தை செயல்படுத்துவதற்கு தொலை தொடர்பு இலாகா எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் மிகுந்த கவலை தெரிவிக்கப் பட்டது. எனவே, அனைத்து தொழிற்சங்கங்கள் விடுத்த அனைத்து அறைகூவல்களையும் பெருந்திரளாக அணிதிரட்டி நடத்திடுமாறு, அனைத்து மாநில மாவட்டச் சங்கங்களுக்கும் மத்திய செயற்குழு கூட்டம் அறைகூவல் விடுத்துள்ளது. அனைத்து தொழிற்சங்க அறைகூவல்களை நிறைவேற்றுவதோடு, பொதுமக்கள் மத்தியில் துணை டவர் நிறுவனத்திற்கு எதிராக தீவிர பிரச்சாரம் செய்யும் வகையில், குடும்ப உறுப்பினர்களோடு தர்ணா, தீப்பந்தம் ஏந்தி பேரணிகள், மாநில மாவட்ட மட்டங்களில் பத்திரிகையாளர் சந்திப்பு ஆகியவற்றையும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். துணை டவர் கம்பெனி முடிவைக் கைவிடச் செய்ய இத்தகைய பொதுமக்கள் மத்தியிலான பிரச்சாரம் மிக அவசியம். நமது மத்திய தலைமையகம் இது குறித்து அனைத்து தொழிற்சங்கங்களோடு விவாதிக்கும்.

### 2. ஊதிய மாற்றம்

ஊதிய மாற்ற பிரச்னையில் ஒரு முறிப்பைக் கொண்டு வர அனைத்து தொழிற்சங்கங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை மத்திய செயற்குழு கூட்டம் பாராட்டியது. மாண்புமிகு தொலைதொடர்பு மந்திரி இப்பிரச்னையை மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு கொண்டு செல்வதாக உறுதி அளித்துள்ளார். இத்தகைய சூழ்நிலையில், மேலும் விழிப்புடன் இருக்குமாறும், இறுதி தீர்வை எட்டும் வரை ஊழியர்களை போராட்ட தயார்நிலையோடு வைத்திருக்குமாறும், அனைத்து தொழிற்சங்கங்களை, மத்திய செயற்குழு கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.

### 3. 3.5.2018 அன்று கறுப்பு அட்டை ஆர்ப்பாட்டத்திற்கு அணி திரட்டுதல்

பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து, மதிய உணவு இடைவேளையில் கறுப்பு அட்டை அணிந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திட மத்திய செயற்குழு கூட்டம் முடிவு செய்துள்ளது.

1. BSNL பணிகளை அசுர வேகத்தில் வெளியாருக்குக் கொடுப்பதை நிறுத்திடு !
2. BSNL நிறுவனத்தின் வீண் செலவுகளை குறைத்திடு !
3. பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் மருத்துவ வசதிகளைக் குறைக்காதே !
4. ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்யாதே!
5. SR. TOA கேடரில் புதிய நியமனங்கள் செய்திடு !

## 4. நவீன தாராள மயக் கொள்கைகளை எதிர்த்தும், சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் தொடர்ச்சியான பிரச்சாரங்கள்

நவீன தாராள மயக் கொள்கைகளை எதிர்த்தும், நாட்டில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் தொடர்ச்சியான பிரச்சாரங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை மத்திய செயற்குழு கூட்டம் வலியுறுத்தியது. 19.5.2018 அன்று தோழர். மோனி போஸ் அவர்களின் 8- வது நினைவு தினத்தை முன்னிட்டு, மேற்கண்ட இரண்டு தலைப்புகளில், "தோழர். மோனி போஸ் நினைவு சொற்பொழிவுகள்" நடத்திடுமாறு மத்திய செயலகத்தையும், மாநிலச் சங்கங்களையும், மத்திய செயற்குழு கூட்டம் பணித்துள்ளது. இந்த நிகழ்ச்சியை மிக சிறப்பான முறையில் நடத்திட அனைத்து மாநிலச் சங்கங்களும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த சொற்பொழிவுகளை வழங்க முற்போக்கு கருத்துள்ள அறிவுஜீவிகள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 5) நிறுவனத்தில் வீண் செலவுகளைக் கட்டுப் படுத்துவது குறித்து அனைத்து மத்திய செயற்குழு உறுப்பினர்களும் மத்திய தலைமையகத்துக்கு குறிப்புகள் கொடுக்க வேண்டும்.

BSNLஇல் நடைபெறும் வீண் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசர தேவை குறித்து மத்திய செயற்குழு கூட்டம் மிகுந்த கவலையோடு விவாதித்தது. நிறுவனத்தின் பல்வேறு மட்டங்களில் நடைபெறும் வீண் செலவுகள் குறித்து அனைத்து மாநிலச் செயலாளர்களும், அகில இந்திய நிர்வாகிகளும் மத்திய தலைமையகத்துக்கு ஒரு குறிப்பு வழங்க வேண்டும் என முடிவு எடுக்கப் பட்டது. தலமட்ட குறிப்புகளின் அடிப்படையில், மத்திய தலைமையகம், கார்ப்பரேட் நிர்வாகத்துக்கு இது குறித்து விரிவான அறிக்கை அளிக்கும். 16.4.2018- க்குள் இந்த அறிக்கை அளிக்கப் பட வேண்டும்.

## 6. இளம் ஊழியர்களுக்கான கருத்தரங்கம் :

செயலூக்கம் மிகுந்த தொழிற்சங்க இயக்கத்துக்குள் இளம் ஊழியர்களைக் கொண்டு வர வேண்டிய அவசியத்துக்கு மத்திய செயற்குழு கூட்டம் அழுத்தம் கொடுத்து விவாதித்தது. இதனை நடைமுறைப் படுத்த அனைத்து மாநிலச் சங்கங்களும் இளம் ஊழியர் கருத்தரங்கங்களை நடத்த வேண்டும் என முடிவு செய்யப் பட்டது. நேரடி நியமன ஜூனியர் எஞ்ஜீனியர்கள கணிசமான எண்ணிக்கையில் இக்கருத்தரங்கத்திற்கு அழைக்க சிறப்பு கவனம் செலுத்தப் பட வேண்டும். 30.6.2018- க்குள் இக்கருத்தரங்கம் நடத்தப் பட வேண்டும்.

## 7) மத்திய தலைமையக பகுதிப் பணம் :

மத்திய தலைமையக பகுதிப் பணத்தைச் செலுத்துவது குறித்த முந்தைய செயற்குழு கூட்டத்தின் முடிவுகள் அமுல்படுத்தப் படாத்து குறித்து மத்திய செயற்குழு கூட்டம் மிகுந்த கவலையோடு பரிசீலித்தது.

இது குறித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன. மாநிலச் சங்கங்கள் இம்முடிவுகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

1) 2016 மற்றும் 2017- ஆம் ஆண்டுகளுக்கான, மாவட்ட வாரியான பகுதிப் பண விவரங்களை மாநிலச் சங்கங்கள், மாநில நிர்வாகத்திடமிருந்து பெற்று 30.4.2018-க்குள் மத்திய தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும்.

2. சில மாநிலங்களில் புதிய விகிதத்தில் அல்லாமல், பழைய விகிதத்திலேயே சங்கத்திற்கான சந்தாத் தொகை பிடித்தம் செய்யப் படுவதாகத் தெரிய வருகிறது. இது சரியல்ல. இத்தகைய

மாநிலச் சங்கங்கள் புதிய விகிதத்தில் சந்தா பிடித்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. சில மாநிலங்களில், மத்திய தலைமையகத்துக்கான பகுதிப் பணம், மாநிலச் சங்கங்களிடம் வழங்கப் படுவதாகத் தெரிகிறது. இது, பகுதிப் பணம் குறித்த கார்ப்பரேட் அலுவலக உத்தரவுகளை மீறுவதாகும். இத்தகைய மாநிலங்களில், நிர்வாகமே அகில இந்திய சங்கத்துக்கான பகுதிப் பணத்தை அனுப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**8) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஜெயந்தி - 14.4.2018 அன்று கொண்டாடுதல்** :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பியும், சமூக நீதி காவலருமான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த நாள் 14.4.2018 அன்று கொண்டாடப் படுகிறது. இதனை சிறந்த வகையில் கொண்டாட மாநில மாவட்டச் சங்கங்கள் அனைத்து தயாரிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில், பட்டியலின மற்றும் பழங்குடி ஊழியர்களின் பிரச்னைகளைத் தீர்க்க BSNL ஊழியர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை உரிய முறையில் விளக்கப் பட வேண்டும்.

9) **மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளை அமுலாக்க மத்திய சங்க நிர்வாகிகளுக்கு வேலைப் பங்கீடு :**

மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளை விவாதித்து அமுலாக்க 30.4.2018- க்குள் அனைத்து மாநிலச் சங்கங்களும் மாநில செயற்குழு கூட்டங்களை நடத்த வேண்டும். முடிவுகளை சிறப்பான முறையில் அமுலாக்க உதவும் வகையில் மத்திய சங்க நிர்வாகிகள், மாநில செயற்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு வழிகாட்டிட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சங்க நிர்வாகிகள் பொருப்பாக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் தமிழ் மாநில சங்கத்திற்கு மத்திய சங்கத்தின் அமைப்பு செயலாளர் தோழர் கொண்டு வழிகாட்டிட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சங்க நிர்வாகிகள் பொருப்பாக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் தமிழ் மாநில சங்கத்திற்கு மத்திய சங்கத்தின் அமைப்பு செயலாளர் தோழர் M.விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு தோழர் S.செல்லப்பா AGS நியமிக்கப்பட்டுள்ளார். 30.4.2018-க்குள் மாநிலச் செயற்குழு கூட்டங்களை நடத்துவதோடு, அது குறித்த அறிக்கையை மத்திய தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும்.

**மத்திய செயற்குழுவின் முடிவுகளை முழுமையாக அமலாக்குவோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபுராதாகிருஷ்ணன்)**
**மாநிலசெயலாளர்**